திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தை தொழிலில் பின்தங்கிய மாவட்டமாக கருதி, இந்த அரசு நீலகிரி மாவட்டத்திற்கென தனியாக ஒரு தொழில் சென்டரை ஏற்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் தனியாக தொழில் மையத்தை அமைப்பதற்கான செயற்குறிப்பை அரசு தீவிரமாக பரிசீலனை செய்து வருகிறது. அது விரைவில் அமைக்கப்படும்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, உதகமண்டலம் இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலையில் கலர் பிலிம் பிரிவு நிச்சயமாக அமைக்கப்படும் என்று பிரதமர் அவர்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியின் சில தலைவர்களிடம் வாக்குறுதி கொடுத்ததாக பத்திரிக்கையிலே செய்தி வந்திருக்கிறது. அத்தகைய வாக்குறுதியை பிரதம மந்திரி அவர்களிடமிருந்து தமிழக அமைச்சர் பெற முடியவில்லையா? அல்லது இந்திரா காங்கிரஸ் கட்சியினர் சென்றால்தான் அந்த வாக்குறுதி அளிக்கப்படுமா? இதற்கு அமைச்சர் அவர்கள், இந்தத் தொழில் அங்கே அமைக்கவேண்டும் என்று பிரதம மந்திரி அவர்களைச் சந்தித்தார்களா? அவர் அப்போது என்ன பதில் சொன்னார் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, இதுபற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை.

வேதாரண்யம் திருக்கோயிலுக்கான அறங்காவலர்

*வினா எண் 285—திரு. எம். எஸ். மாணிக்கம் : திரு. என். பழனிவேல், திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் திருக்கோயிலுக்கு, இலங்கையைச் சேர்ந்தவர் பரம்பரை அறங்காவலராக இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதை மாற்றி பரம்பரையில்லாத அறங்காவலர்களை அரசு நியமனம் செய்யும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) அருள்மிகு வேதாரண்யேஸ்வரசுவாமி ஆலயத்திற்கு தவத்திரு ச. கதிர்காம பண்டார சந்நிதி என்பவர் தற்போது பரம்பரை அறங்காவலராய் உள்ளார். அவர் இலங்கைத் தமிழராவார். அவர் இந்தியாவில் வசிக்க அரசாங்கத்தில் அவ்வப்போது அனுமதி

பெற்றுவருகிறார். மேற்கண்ட ஆலயத்தின் நிர்வாகத்திட்டம் மாற்றி அமைக்கப்பட்டு, பரம்பரை அறங்காவலருடன் இரண்டு பரம்பரை அல்லாத அறங்காவலர்களை நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. எம். எஸ். மாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே அவருடைய விசாக் காலத்தை நீட்டிக்காமல், அவர்களுக்கு அனுமதி மறுத்தால், அவருடைய பரம்பரை அறங்காவலர் பதவி ரத்தாகிறது. எனவே, அவர் விசாக் காலத்தை நீட்டிக்காமல் இருக்கும்படி, மத்திய அரசை தமிழக அரசு கேட்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசாக் காலத்தை நீட்டிப்பதும், நீட்டிக்காமல் இருப்பதும் மத்திய அரசினுடைய ஆதிபத்தியத்திற்கு உட்பட்டது. ஒரு இலங்கை பிரஜையினுடைய விசாவை நீட்டிக்கக் கூடாது என்று தமிழக அரசு காரணம் இல்லாமல், சொல்வதற்கு வழியில்லை என்று நினைக்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பரை அல்லாத அறங்காவலரை நியமனம் செய்வதற்கு உயர்நீதி மன்றத்திலே தடை வாங்கியிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே தடையை நீக்கி பரம்பரையில்லாத அறங்காவலரை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்திலே தடை பெற்றிருக்கிறார்களா என்ற விவரம் அரசிடம் இல்லை; தடை பெற்றிருந்தால் அதை நீக்குவதற்கு அரசு முயற்சி செய்யும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கேள்வியை நான் கேட்டது வேதாரண்யம் கோவில் சம்பந்தமாக அல்ல; தமிழ்நாட்டிலுள்ள பரம்பரை அறங்காவலர்கள் குறித்து தான் கேட்டிருந்தேன். தமிழகத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோவில்கள் தனியார் நிர்வாகத்தில் பரம்பரையாக வந்துகொண்டிருப்பதாக தெரிகிறது. அதை ஒழிப்பதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பரை அறங்காவலர்கள் பொறுப்பில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோவில்கள் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அந்த கணக்கு சரியா என்று தெரியவில்லை. இருந்தாலும்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1983 பிப்ரவரி 15]

பெரும்பாலான கோவில்கள், சில முக்கியமான கோவில்கள் எல்லாம் கூட இப்படி பரம்பரை அறங்காவலர்கள் பொறுப்பில் இருந்துகொண்டு அறநிலையத் துறையோ, அரசோ அதனுடைய நிர்வாகத்தின் உள்ளே தலையிடமுடியாமல் தடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே இப்படிப்பட்ட பரம்பரை அறங்காவலர்கள் முறையை நீக்குவதற்கு ஒரு புதிய சட்டமுன்வடிவை அறிமுகப் படுத்தி சட்டம் நிறைவேற்ற அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பரம்பரை அறங்காவலர்கள் இருந்து கொண்டிருப்பதால் இன்றைக்கு கோவில் நிர்வாகங்களில் அவர்களும், அங்கே இருக்கக் கூடிய அதிகாரிகளும் சேர்ந்து கொண்டு பல ஊழல்களை செய்துவிடுகிறார்கள். ஆகவே இந்த அரசு பரம்பரை அறங்காலவர்களை ஒழிப்பதற்கான மசோதாவை கொண்டு வருவதற்கு உத்தேசித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை இந்த ஆண்டிலேயே கொண்டுவருவதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் அந்த சட்டமுன்வடிவை கொண்டு வந்து நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடபாதிமங்கலத்தில் ஏஜெண்டாக, பூசாரியாக இருந்தவர் இன்று இங்கே ட்ரஸ்டியாக இருக்கிறார்களே அது அரசிற்கு தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன். இந்த கோவிலுக்கு ஏதாவது சொத்துக்கள் இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இது வேதாரண்யம் திருக்கோவிலைப் பற்றிய கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் எந்த கோவிலைப் பற்றிக் கேட்கிறார்கள் என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வடபாதிமங்கலம் கோவிலைப் பற்றிக் கேட்கிறார்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பரை தர்மகர்த்தா ஒழிப்புச் சட்டத்திற்கு ஜனாதிபதி ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறதா? இந்த சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க முடியாமல் தமிழ்நாட்டிலுள்ள ஆதீனகர்த்தாக்கள் தடையாக இருப்பது அரசிற்குத் தெரியுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஜனாதிபதி ஒப்புதல் பெறப்படாமல் இருக்கிற சட்டம் பரம்பரை அறங்காவலர்களை நீக்குகிற சட்டம் அல்ல. அது சில மடங்களுடைய நிர்வாகங்களை சீர்திருத்துவதற்காக கடந்த ஆண்டுகளில் சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட சட்டம் ஆகும். ஆனால் இப்போது நாம் புதியதாக, பரம்பரை அறங்காவலர்களை நீக்குவதற்கும், அதை திருத்தியமைப்பதற்கும் வழிகாணுகிற வகையில் புதிய சட்டத்தை உருவாக்க இருக்கிறோம். முன்னால் இப்படிப்பட்ட பரம்பரை அறங்காவலர்கள் இருக்கிற, மடாதிபதிகள் இருக்கிற கோவில்களில் நிர்வாக அதிகாரிகளை கூட போடக் கூடாது என்று அவர்கள் நீதிமன்றத்திலே தடை ஆணையைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே தான் இந்த நிர்வாகத்திலே நம்முடைய அதிகாரிகளை அனுப்பி விவரங்களைப் பெறமுடியாமல் இருக்கிறது.

தமிழ் நாட்டிலுள்ள சுற்றுலா இடங்கள் பற்றிய செய்திப் படம்

*வினா எண். 286—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சுற்றுலா இடங்கள் பற்றிய சினிமா படம் எடுக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது இத்திட்டம் தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) அண்ட் (ஆ): தற்போது 'தமிழகத்தில் ஓய்விடங்கள்' (Holiday Resorts of Tamil Nadu) என்னும் தலைப்பில் ஒரு சுற்றுலா செய்திப்படம் வண்ணத்தில் தமிழ்நாடு அரசு செய்திப்பட பிரிவின் மூலம் அரசு தயாரித்துக் கொண்டிருக்கிறது. இந்த செய்திபடத்தின் தயாரிப்பு 1983 மார்ச் மாத இறுதிக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலுள்ள சுற்றுலா மையங்களை வரலாற்று சிறப்புடன் வெளிநாடுகளில் விளம்பரப்படுத்த அரசிடம் சிறப்புத் திட்டங்கள் ஏதாவது இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய சிறப்புமிக்க சுற்றுலாத் தலங்கள் நல்ல படங்களின் மூலம், போஸ்ட்கார்டுகளின் மூலம், புத்தகங்